# கொழுந்து

1989

இதழ் 6

விலை 5 ரூபா



மலையக வெளியீட்டக வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complimente from*

**COLLAR CAMP**

Wholesale & Retail Dealers in Dyes & Chemicals
Specialist in Flower & Batick Dyes
We have dye for all purpose

41, Bankshall Street,
COLOMBO - 11.
Phone:- 548818

இல்லத்தரசிகளின் உள்ளங்கவர்ந்தது
பிறவுண்சன் தயாரிப்புகளே

**BROWNSON INDUSTRIES**

139: BANKSHALL STREET,
COLOMBO - 11.
Telephone: 27197

வெள்ளம் போல் கலைப் பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்று பதவி கொள்வார்

# கொழுந்து

இதழ் ஆறு

ஆசிரியர் : அந்தனி ஜீவா

**KOZHUNDU** 57, மகிந்த பிளேஸ், கொழும்பு -6

செப்டம்பர் - ஒக்டோபர் 1989

## தோட்டங்கள் தோறும் வாசிகசாலைகள்.......

அன்புள்ளங் கொண்டவர்களே,

மலைமுகடுகளிலும் தேயிலைக்காடுகளிலும்
தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ள
மலையக மக்களின்
வாசிக்கும் பழக்கத்தை தூண்டும் வண்ணம்
தோட்டங்கள் தோறும்
வாசிகசாலைகள் அமைக்கப்பட வேண்டும்
மலையக கலை இலக்கியப் பேரவை
இதனை வற்புறுத்தி வந்துள்ளது.
தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின்
சந்தாப் பணத்தில் மட்டும் கருத்தாயிராமல்
அவர்களின் அறிவுக் கண்களை திறப்பதில்
அதிக அக்கறை காட்ட வேண்டும்
தோட்டங்கள் தோறும்
சாராயக் கடைகள் திறப்பதில் நம்மவர்கள்
காட்டும் ஆர்வத்தை தோட்டங்களில்
வாசிகசாலை அமைப்பதில் காட்டவேண்டும்
மலையக சமூக நிறுவனங்களும்,
தொழிற்சங்கங்களும், இதனை செயலாக்க
முன்னின்று செயல்பட
முன் வர வேண்டும்

ஆசிரியர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைச் சித்திரம் !

# எங்கள் துரை வருகிறார்!

— க. ப. லிங்கதாசன் —

தொடைதெரியக் காற்சட்டை தொந்தி தள்ளும் மேற்சட்டை
தொப்பியுடன் கைதடியுங் கொண்டே!- சப்பாத்து
நடைதெறிக்க 'அல்சேஸன்' நாயுடனே எங்கள் துரை
நாலாம் நம்பர் மலையேறி வருவார்!- தடியேந்திப்
படையெனவே நிரைவழியே பாவையர் தம் கைவரிசை
பார்த்தபின்னே கீழிறங்கி வருவார்!- அந்தத்
தொடையதிரும் நடையினிலே தோகையரின் கடைப்பார் வைத்
தொடுப்பதனால் உளம் நெகிழ்ந்தே போவார்.

பூக்கூடை விற்பனைக்கும் பூச்சட்டி மாளிகைக்கும்
பொதிசுமக்கும் 'ட்ரூப்பரிலே' ஏற்றி- அருகே
நாக்கூச்சம் இல்லாமல் நாயகனின் பெயர்சொல்லும்
நம்மதுரைச் சாணியுடன் போவார்! – பின்னால்
பூக்கோவா, போஞ்சி, கரட், பூசலாது கறிவகைகள்
'பொக்கட்டோக்' பிள்ளைகுட்டி சுமையும் - தாங்கி
ஊக்கமுடன் ஊர்நோக்கி ஓடும்வண்டி வாரத்திலே
ஒவ்வொருநாள் வெள்ளிவந்தால் போதும்!

ஆட்டுமாட்டு வருமானம் ஆள்கொடுக்கும் வருமானம்
அத்தனையும் சேர்க்கும் துரைச்'சாணி' - 'கையுறை'
கேட்டு விட்டால் கூச்சமென்று கேளாமல் 'என்வலப்பில்'
கிடைத்துவிடும் பெருத்தவருமானம்! – எல்லாம்
போட்டு ஒரு மாடிவீடும் புத்தம்புது 'லாஞ்சர்' ஒன்றும்
புதுவருடம் பிறக்குமுன்னே சேரும்!- எங்கள்
நாட்டுவருமானத்திலே நம்மதுரை 'ஜாலியாக'
நடையயின்று வருவதுவோ மானம்?



# மலையகத்தில் நூலகத் தேவை

பெருந்தோட்டப் பகுதிகளில் நூலகத் தேவை இன்னும் உணரப்படாமலிருப்பது உண்மையில் பெரிதும் வருந்துவதற்குரியது. ஐரோப்பிய நாடுகளில் 15 ஆம் நூற்றாண்டிலேயே நூலகத் தேவை உணரப்பட்டிருந்தது. அமெரிக்க, பிரெஞ்சுப் புரட்சியும், கிறிஸ்தவ மதச் சீர்திருத்த இயக்கங்களும் 19 ஆம் நூற்றாண்டில் நூலகத் தேவையை மனித சமுதாயத்தில் வெகுப்பரவலாக உணரவைத்தன.

இருபதாம் நூற்றாண்டின் இறுதி தசாப்தத்தை நோக்கிச் சென்று கொண்டிக்கின்ற இன்றைய காலகட்டத்திலும் நூலகத் தேவை பெருந்தோட்டப் பகுதிகளில் உணரப்படாதிருத்தற்கு—

* உடல் உழைப்பாளராக 95 சதவீதத்தினர் அமைந்திருக்கும் ஒரு சமூகமாக இது இன்னும் இருப்பது.
* இச் சமூகத்தைச் சார்ந்த இளவல்கள் கல்லூரிப் படிப்பை (பத்தாம் வகுப்பு) முடிக்கும் தறுவாயிலேயே நகர்ப்புற வியாபார நிலையங்களுக்குள் கவர்ந்து விடப்படுவது,
* தோட்டங்களுக்குள் தொழில் பார்க்கும் (மத்திய தர வகுப்பினர்) படித்தவர்களும் வாசிக்கும் மனோபாவம் குன்றியவர்களாக இருப்பது,
* படித்தவர்களாகவும், வாசிப்புணர்வு மிகுந்தவர்களாகவும் இருப்பவர்கள் தொழிலேதும் பெறமுடியாத நிலையில் தோட்டத் தொழில் புரியும் தமது குடும்பத்தினருக்குப் பாரமாக இருப்பது.

என்ற ஏதோ ஒன்று அல்லது எல்லாமே இணைந்த ஒன்று காரணமாக அமையலாம்.

சாரல்நாடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றோ பலவோ —

மலையக சமுதாயம் சீரழிந்து போவற்கு இது போதாதா?

வளரும் சமுதாயத்தின் வாசிப்புப் பழக்கம் வளர்க்கப்பட வேண்டியது அவசியமான ஒன்றாகும். வாசிப்பு என்பது கல்வியை வளர்க்கும் பழக்கங்களில் ஒன்றாகும். கல்வி என்பது இடைவிடாது கொடுக்கப்பட வேண்டிய ஒரு பயிற்சியாகும்.

இவைகளில் இடையில் ஏற்படும் தொய்வு ஒரு தடையாகக் கருதப்படும், நிவர்த்திக்க முடியாத ஒரு பெரிய தடையாக அமைந்து விட்டிருப்பதை சமீபத்தைய இலங்கை நிகழ்வுகள் புலப் படுத்துகின்றன.

இடைவிடாத கல்விக்கு நூலகங்கள் அவசியமாகும் ஏனென்றால், நூலகங்கள் வாசிக்கும் பழக்கத்தை மாத்திரமல்ல — நூலகங்கள் சேகரிக்கும் பழக்கத்தையும் உண்டு பண்ணுகின்றன.

வாசிக்கும் பழக்கமும், வாசனையைத் தனது தேவைக்குப் பயன் படுத்தும் பழக்கமும், ஒரு சமுதாயத்தில் முன்னேற்றப் பாதையில் மைல் கற்களாகக் கருததப்படுதல் வேண்டும்.

கியூபாவிலும், சோவியத் ருஷ்யாவிலும் தொழிலாள இயக்கங் கள் புத்தகங்களை மக்களிடம் கொண்டுசெல்வதற்கும், வாசிக்கும் பழக் கத்தை அவர்களிடையே ஏற்படுத்துவதற்கும் பெரிதும் உதவியிருக் கின்றன.

பெரும்பாலும் பிறநாடுகளிலும், புத்தகப் பதிப்பாளர்களே நூல கத்துக்குப் புத்தகங்களை அனுப்புகிறார்கள்.

இன்னும் சில நாடுகளில் புத்தக விற்பனையாளர்கள் நூலகத்துக்கு புத்தகங்களை அனுப்புகிறார்கள்.

பெருந்தோட்டப் பகுதிகளில் இந்த இரண்டும் முறைகளும் - பதிப் பாளரும், விற்பனையாளர்களும் நூல்களை அனுப்பிவைப்பது - ''ஸ்நா னப் பிராப்தம்'' கூடப் பெறாத ஓர் அம்சமாகும்'

வாசகனின் வாசனை அபிவிருத்திக்குக் காரணம் என்று நூலகம், பதிப்பாளர், விற்பனையாளர் என்று ஒன்றொடொன்றாக இணைந்ததொரு



வட்டத்தை நாம் காட்டமுடியுமென்றாலும், அது மீண்டும் 'ஸ்நானப் பிராப்தம்' பெறாத ஒரு நடப்பாகவே கருதப்படல் வேண்டும்.

நூலகங்கள் - அதிலும் பொது நூலகங்கள் (மாநகர, நகர, உள் ளூராட்சி) பொது மக்களின் வரிப்பணத்தில் நடாத்தப்படுகின்றன. எனவே, தங்களின் தாய் மொழியில் உள்ள புத்தகங்கள் வேண்டும் என்று குரலெழுப்பும் உரிமை பொது மக்களுக்குண்டு.

மலையகப்பகுதிகளில் பதுளை, நுவரெலியா, மாத்தளை, இரத்னபுரி, குருநாகலை, கண்டி என்ற மாநகர சபைப்பிரிவுகளும், அவிசாவளை பலாங்கொடை, பண்டாரவளை, கம்பளை, அப்புத்தளை, அட்டன் - டிக் கோயா, கடுகண்ணாவ, களுத்துறை, நாவலப்பிட்டிய, தலவாக்கொல்லை - லிந்துலை என்ற நகரசபைப் பிரிவுகளும் தெஹியோவிட்டை, மாவ னெல்லை, மத்துகம, பசறை, பெல்மதுள, பூண்டுலோய, புசல்லாவ, றக்வானை, ரம்புத்தொட்டை, இறத்தொட்டை, ரூவான்வல்ல, தெல் தெனிய, வரக்காப்பொல, வெலிமடை, எட்டியாந்தோட்டை என்ற பட்டினசபைப் பிரிவுகளும் இருக்கின்றன. மொத்தமாகவுள்ள 549 கிராமசபைகளுக்குள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கைத் தமிழ் பேசும் மலையகப் பகுதிக்குள் அமைந்துள்ளன. இவைகள் எல்லாமே, பொது மக்களின் வரிப்பணத்தினைப் பெற்று நூலகங்கள் நடாத்துகின்றன. இவைகள், அனைத்தும் தலா இரண்டு பிரதிகள் என்று வாங்கவேண் டிய நிலைமையை நிர்ப்பந்தத்தை உருவாக்கினால் ஒவ்வொருவெளியீட் டிலும் 200 பிரதிகள் விற்பனையாவதில் எந்த வித சிரமுமே இருக்க முடியாது.

அறிவைப்பாதுகாப்பதற்கு காட்டிய சிரத்தையில் கால்வாசியே னும் அறிவைப்பரப்புவதற்கு ஆசியர்களும், ஆபிரிக்கர்களும் காட்ட வில்லை என்பது பலரது கணிப்பாகும்.

வாசிப்பதை பழக்கப்படுத்திக் கொள்ளாத ஒரு சமூகத்தில் வாசிக் கும் பழக்கத்தை வளர்த்தெடுப்பதற்கு ஒரு தனிமனிதனுக்கு புறம் பான தனி மனித முயற்சி தேவைப்படுகின்றது. தேவையான புத்த கங்கள் கிடைப்பதால் தொடர்ந்து சிரமம் ஏற்படுகின்ற நிலைமை உரு வாகின்ற போது வாசிக்கும் ஈடுபாடு குறையத் தொடங்குவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பாய் ஒருவனிடத்தில் எழுகின்ற துடிப்பு அடங்கி விடுவதும் பொதுவில் தவிர்க்கமுடியாததே.

பெருந்தோட்டச்சிறுர்கள் வாசிப்பது குறைவு பள்ளிக்கூடத்துக்குப் போவதற்கு முன்பு அவர்கள் புத்தகங்களைப் பார்க்காதிருப்பது இதற்கு மிக முக்கியமானதொரு காரணமாகும்.

பத்தொன்பா. தம் நூற்றுண்டில் ஒரு தனிமனிதனின் உழைப்பு வருமானத்தில் 40க்கும் 50க்கும் இடைப்பட்ட விகிதாசாரத்தில் புத்தகங்கள் வாங்கப்பட்டன என்றும், மலிவுப்பதிப்பு, மாணவப்பதிப்பு என்ற முயற்சிகளும், இன்றைய நவீன கண்டுபிடிப்பு வசதிகளும் இதை 5சத விகிதாசாரத்துக்குக் கொண்டு வந்திருப்பதாகவும் கணக்கெடுத்திருக்கின்றுர்கள்.

1930 களில் நடேசய்யர் மலையகத்தில் 25 சத வெளியீடுகளைக் கொண்டுவரும் போது தோட்ட மக்களின் வருமானம் 41 சதமாக இருந்தது. இன்று வருமானம் 38 ரூபாவாக இருக்கும் போது 19 ரூபாவுக்குக் கொண்டுவரப்படும் நூல்கள் இன்னும் 50சத விகிதாசாரத்திலேயே அமைந்திருக்கின்றன. அதற்கு குறைந்த அளவில் புத்தகங்கள் வெளியிடப்படும் வாய்ப்புகளிருந்து, அதற்கு குறைந்த 'விஷியஸ் சேர்க்கில்' என்று ஆங்கிலத்தில் குறிக்கப்படும் மீளா வட்டத்துக்குள் அமிழ்ந்து விடும் நிலைமையை இது குறிப்பதாக மலைத்துக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

தோட்டங்கள் தோறும் நூல்நிலையங்கள், நகரப்பாடசாலைகள் தோறும் நூல் நிலையங்கள், எல்லாப் பகுதிகளிலுமே வாசகர் வட்டங்கள், என்ற நிலை தோற்றுவிக்கப்படும் சூழ்நிலை உருவாகும் போது மலையகத்தில் புத்தகங்கள் வெளியிடப்படுவது பிறர்கண்டு வியக்கும் அளவுக்கு வியாபித்துப் பெருகும் அதுவரை - அந்த நிலை உருவாகும் வரை – அத்த நிலைமை உருவாவதற்கு நாமெல்லாம் கைகோர்த்து நிற்காதவரை - புத்தகங்கள் வெளியிடும் முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் சமூகத்தில் விநோதமானவர்களாகவே கருதப்படுவார்கள். இந்த நிலைமை நீடிப்பது மலையக இலக்கிய வளர்ச்சிக்கு எந்தவிதத்திலும் ஆரோக்கியமானதாக அமைய முடியாது.



# எல்லை தாண்டாத அகதிகள்

## மாத்தளை சோமு

"யட்டவத்தை தோட்டத்து லயத்தை அடிச்சி, நொறுக்கி நெருப்பு வைச்சி, லயத்தில் இருந்த சாமான் சட்டு முட்டுகள தூக்கிட்டு போயிட்டானுக. லயத்தில் இருந்த ஆளுக புள்ள குட்டிகளோட காட்டுக்குள்ள ஓடி மறைஞ்சிட்டாங்க... தோட்டத்து தொரை எந்த நடவடிக்கையும் எடுக்கலியாம்... எல்லாம் முடிஞ்சோன்ன தோட்டத்து லொறியில ஆள்கள ஏத்தி மாத்தளை மாரியம்மன் கோயில இறக்கிவுட்டுட்டு போயிட்டாரு. இம்புட்டும் செஞ்சதும் யார் தெரியுமா? யட்டவத்த தோட்டத்துக்கு போற சந்தியில இருக்கிற கடைக்காரன் மகன்தான்!"- மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க ஓடிவந்த வேலு பதறியபடி சொன்னுன்... அவன் சொன்னது அத்தனையும் உண்மை! நடந்ததை நேரில் பார்த்தவன்... கண்கள் பார்த்ததை வாய் வெளிப்படுத்துகின்றது.

ஒரு வட்டம் போட்டது போல் வேலுவைச் சுற்றி ஒரு கூட்டம்... அதில் சிங்காரம் - ஆண்டிக் கிழவன் - என்று ஒரே தோட்டத்தைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள்.

"இந்த பக்கத்தில இருந்த ஒரே ஒரு தோட்டத்தையும் எரிச்சிட்டானுகளே! கவுருமெண்டும் ஒரு நடவடிக்கை எடுக்கல்ல... நாடு போற போக்கு சரியில்ல..." இது ஆண்டிக் கிழவனின் அறுபது வருட அனுபவ முத்திரை.

"இதுக்குத்தான்யா இந்தியாவுக்கு போயிடுவோம்னு சொன்னேன். எவன் கேட்டான்!..." உழைப்பில் தேயிலைக் காட்டுக்கு ஒரு பரம்பரையைத் தியாகம் செய்த பிரதிநிதியின் குரல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அட நீ ஒண்ணு ஏதாச்சும் கலவரம்னதும் இந்தியாவுக்கு போயிடுவோம்னு சொல்வீங்க கலவரம் முடிட்சோன்ன அதை மறந்திடுவீங்க... ஒரு நெலையான பேச்சு நம்ம ஆளுகளுக்கு இல்ல... அதனால்தான் அடி விழுது-” இது ஒருத்தன்.

“இந்த நாட்டுலதான் எங்க பாட்டன் பூட்டன் ஒழைச்சான்! தேயிலை தூளுக்கு அடியிலதான் அவங்கள புதைச்சோம். ! நாங்க ஏன் இந்த நாட்டை விட்டு போவேணும்? ஒருத்தரும் போகக் கூடாது...” தன்னை மறந்த சிங்காரம் ‘ஆவேச’ மாக சொன்னான்...

“ஆமாமா. இவுரு ஏன் இப்புடி சொல்லமாட்டாரு? வீட்டுல சிங்களத்த வைச்சிட்டு வெளியில வீராப்பா பேசுறாராக்கும்.. இவருக்குத்தான் இந்தியா போக. முடியாது! இந்தியாவுல இவனை எவன் ஏத்துக்குவான்?”

சிங்காரத்தை தாக்க வேண்டும் என்று காத்திருந்தவனின் தாக்குதல் “என்னடா சொன்ன” என்று சிங்காரம் அவனோடு ‘மோதப்’ போனபோது பக்கத்தில் இருந்தவர்கள் குறுக்கிட்டு அந்த சண்டையை அப்படியே அடக்கிவிட்டார்கள்.

சிங்காரம் நெஞ்சில் சுமையேறியவனாக தலை குனிந்திருந்தான்... ஆண்டிக்கிழவன் அவனை ஆறுதல் படுத்துவது போலவும் மற்றவர்களுக்கு பதில் சொல்வது போலவும் பேசினான்.

“சிங்காரம் அவனை கட்டிக்கிட்டு ஒரு வருசமாச்சி! இன்னைக்கி அவ சிங்களத்தி மாதிரியா இருக்கா! அசல் தமிழிச்சி மாதிரியல்ல இருக்கா! அந்தக் கதையெல்லாம் இப்ப எதுக்கு...? நடக்கிற வேலைய பாருங்க... ஷீம்... ஆயிரம் கலவரம் வந்தாலும் நம்மாளுக மத்தியில ஒத்துமை வருமாங்கிறது சந்தேகம்......” ஆண்டிக் கிழவன் உள்ளதை – நல்லதைச் சொல்லி அந்தப் பேச்சுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கப் பார்த்தான்... முடியவில்லை... அடுத்த கேள்வி வெடித்துவிட்டது!

“அதுசரி தாத்தா! ஏன் சிங்காரத்துக்கு சப்போட் பண்ணனும் ? நம்ம லயம் எரிஞ்சதுக்கு அவன்தான் காரணம்...! அவன் சிங்களத்தியை கட்டப் போயி அவன் தம்பிதானே லயத்துக்கு நெருப்பு வைச்சான்! ” என்று ஒருத்தன் பேச்சை நீட்டப் போனபோது கிழவன் அதை இடைமறித்துவிட்டான்..;

“நம்ம லயம் நீ சொன்ன மாதிரி சிங்காரத்தினால எரிஞ்சதுன்னு வைச்சிக்குவோம் அப்படின்னா மத்த லயிம் யாரால எரிஞ்சிச்சி? இதெல்லாம் நம்ம தலையெழுத்தினால நடக்குது... யாரையும் கொறை சொல்லி பிரயோசனம் இல்ல... என்னைக்கி வெள்ளக்காரனை நம்பி இந்தியாவுல இருந்து வந்தோமோ... அன்னையில இருந்துதான் இந்த பிரச்னை!... வெள்ளக்காரன் நமக்கு ஒரு முடிவும் காட்டாம சீமைக்கு போயிட்டான் அந்த நேரமே ராம ஒரு முடிவை வெள்ளக்காரனுக்கிட்ட கேட்டிருந்தா இன்னைக்கி நாம நிம்மதியா வாழ முடியும்.. தாங்க இந்தியாவுல இருந்து வந்தாலும் இந்த ஊரையே தாய் நாடா நெனைச்சோம். சிலோன் பூரா பஸ் ரெயில் ரோடு போட்டது நம்ம ஆளுகதான்...... அதில எத்தனையோ பேரு செத்துப் போயிட்டாங்க...

சிங்கமலை சொரங்கத்து சுவர்ல போயி பார்த்தா இந்த ரோடு போட்டதில எத்தனைபேர் செத்தாங்கிறது தெரியும்! அப்புடி நம்ம ஆள்க உசுரை குடுத்து ஒழைச்ச நாடு இது..! ஏன் இந்த நாட்டை விட்டு நாங்க போவேணும்?.. ” கிழவன் அதே தோட்டத்தில் பிறந்து, கங்காணியாகி - தலைவராகி இன்று முதிர்ந்து உதிரத்தயாராக இருப்பவர். எவரும் அவருக்குத் தெரியாமல் அங்கே பிறந்ததில்லை - திருமணம் செய்வதில்லை! அவருக்கு எந்த கட்சியின் மீதோ– சங்கத்தின் மீதோ தனிப்பட்ட பற்றுதல் கிடையாது ஆனால் அங்கே நடக்கிற எல்லாவற்றிலும் அவர் இருப்பார்

ஆண்டிக் கிழவன் கேட்ட கேள்விக்கு எவரும் பதில் கொடுக்காததால் அவனே அந்த வாக்குவாதத்தை முடித்து வைத்தான்... “...சரி...சரி போங்க... பேச்சு நீட்டவேணாம்...! சிங்காரம் நீ யோசிக்காதே .! அதெல்லாம் அப்படித்தான்... தைரியமா இரு!”

அந்தக் கூட்டம் மெல்ல கரைந்து போயிற்று...

ஃ ஃ ஃ

சிங்காரம் ரொம்பவும் சோர்ந்து போய் அகதி முகாமிட்ட கோயிலின் உள்ளே போனான்... அவன் மனம் மழை இல்லாத தேயிலைச் செடியாக ‘கருகி’ விட்டது... தான் சிங்களப் பெண்ணான மாலினியை கல்யாணம் செய்ததை இத்தனை நாளும் நெஞ்சில் ‘அடக்கி’ வைத்து குத்திக் காட்டிவிட்டான்...! மாலினி சிங்காரத்தை கைகோர்த்து ஒரு வருடத்திற்கு மேலாகி விட்டது... அதை இன்னமும் நினைத்துக் கொண்டிருக்கிறானே...! அதே நேரத்தில் அவன் சொன்னதில் சில உண்மைகள் இருக்கத்தான் செய்கிறது! அன்று அந்த லயத்திற்கு நெருப்பு வைத்தவன் மாலினியின் அண்ணன்தான் ... அவன் கையில்தான் தீவட்டி இருந்தது...!

தன்னால்தான் அந்த லயம் எரிந்துவிட்டதோ!... அவன் மனம் எங்கோ பள்ளத்தில்... பள்ளத்தில்... விழுந்து கொண்டேயிருந்தது...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சடா'ரென்று ஒரு நினைவு வெட்டி மறைந்தது... அவர்கள் காதல் உச்சக் கட்டத்தில் இருந்த காலம்... அந்த காதல் விவகாம் எப்படியோ அப்பாவின் காதில் விழுந்து விட்டது... அவர் அவனிடம் நேரிடையாக கேட்டார்... சிங்காரம் யோசித்தான்... இப்போது பொய் சொன்னாலும் பிறகு எப்போதாவது உண்மையைக் 'கக்க' வேண்டிவரும்! அதனால் நிஜத்தை... ஆம்...! சிங்காரம் தான் மாலினியைக் காதலிப்பதாக சொன்னான்...

அவ்வளவுதான்... அவர் இதயம் ஸ்டோர் அடுப்பாக கொதித்தது...

''இனி நீ எனக்கு மகனில்ல... இனிமே இந்த காம்புராவுல கால் வைக்காதே! ஏன் மூஞ்சியில முழிக்காதே!...''

சிங்காரம் மறுபேச்சில்லாமல் அந்த காம்பராவை விட்டு போய் துரையிடம் சொல்லி வேறு காம்பராவில் குடியேறி தன் புதுக்கதையைத் தொடங்கினான்... அதற்கு அடுத்த வாரம் மாலினியை பக்கத்து டவுண் பொலிஸ் ஸ்டேசனுக்கு கூட்டிப் போனான் அவன்... அங்கே இருவரும் ஒருவரை ஒருவர் காதலிப்பதாகவும்-திருமணம் செய்ய விரும்புவதாகவும் முறைப்பாடு செய்து கையெழுத்திட்டு வந்தார்கள்... சாதி-சமயம்-மொழி என்ற வட்டத்துக்குள் வட்டமடித்து வாழ்ந்த மாலினியின் பெற்றோர்கள் - அவருடைய சகோதரர்கள் அந்த தமிழ் இளைஞன் - சிங்கள நங்கை திருமணத்தை முறியடிக்க வந்து சட்டத்திற்கு முன்னால் சரணடைந்து போனார்கள்...

சிங்காரத்தோடு கைகோர்த்த மாலினியைப் பார்த்து அவளின் அண்ணன் நெருப்பாய் வார்த்தைகளைக் கக்கினான்...

''தமிழ் பயலோடயா போற... போ? உன்னையும் அவனையும் கவனிச்சிக்கிரேன்...''

அன்று சொன்னதை இன்று செய்து விட்டானோ?...

சிங்காரத்திற்கு யோசனை யோசனையாக வந்தது... கல்யாண மண்டப பக்கம் போனான் மாலினி கலங்கிய கண்களுடன் அவனருகே வந்து நின்றாள்... அவன் மௌனமாக இருந்தான். ஒட்டிப் போயிருந்த அவன் உதடுகள் பிரியவில்லை...

மாலினிக்கு ஒன்றுமே புரியவில்லை... அவன் தோளில் சாய்ந்து அழுதாள்... அவளின் கண்ணீர் துளிகள் அவன் மார்பை நனைத்தது. ஆனால் உன் நெஞ்சை அது நனைக்கவில்லையே!...

சிங்காரத்திற்கு மாலினியைப் பார்க்கிற போதெல்லாம் அவளுடைய அண்ணனின் நினைவு தான் வருகிறது அதனை அவனால் தவிர்க்க முடியவில்லை...



மெல்ல அங்கிருந்து நழுவி கூட்டத்தில் கலந்து தேரடிக்கு வந்தான் சிங்காரம்... தேர்க் கூடாரத்தை அவன் தட்டிப் பார்த்தான்... மாசி மகத்தில் ஓடுகிறதேர் அலங்கரிக்காத மணப்பெண்ணாக நின்றது...

ஒரு கணம் நினைவுக்குள் விழுந்து திரும்பினான் அவன்... அந்த மைதானம் மாசி மகத்தில் நகர்வலம் போகிற பஞ்சரதங்களும் நிற்கிற மைதானம்... அங்கே கலர் கலராய் பூக்கள் பூத்துவிட்டது போன்ற மக்கள் கூட்டம்... அந்த மக்களிடையே காவடி - கரக - பொய்க்கால் குதிரை இன்னும் பல கோஸ்டியினரின் ஆட்டபாட்டங்கள் - வானத்தில் எதிரொலிக்கிற மாதிரி முழங்குகிற வாத்தியங்களின் இசை - அலங்கார பல்புகளின் மினுக்கங்கள் - அரகரா கோசல்கள் ஆகியன கவிஞர்கள் சொல்கிறமாதிரி அந்த இடத்தை தேவலோகமாக்கியிருக்கும்! இன்று?.. ஓ... அந்த மைதானம் அகதி முகாமாகி விட்டது!

சிங்காரம் அந்த சித்திரத் தேரில் தொங்குகிற சிறுமணி ஒன்றை அசைத்தான்... அப்போது அதிலிருந்து கிளம்பிய ஓசையில் கிளர்ந்த நினைவு கூடையில் விழுகிற கொழுந்தாக அவன் நெஞ்சில் விழுகிறது ..

ஃ ஃ ஃ

மாலினியும் சிங்காரமும் அந்த கோயிலுக்கு வந்தபோது அந்த தேரைப் பார்த்தார்கள்... அன்று சாதாரண நாள் எவரும் இல்லை...

அவன் அந்த தேரின் மணியை அசைத்துப் பார்த்தான்... '' கிணிங் ... கிணிங் ... '' என்று அசைந்து ஒரு இதமான ஓசையைக் கொடுத்தது அந்த மணி...... மாலினி தானாக அந்த மணியை அசைக்கப் போனாள்... அவளுக்கு எட்டவில்லை... அப்போது அவன் அவளின் கரத்தைப் பிடித்து இணைத்து உயர்த்தி அந்த மணியை அசைத்தான்... ''கிணிங்... கிணிங்...''

ஓ... எனனமாய் இசைக்கிறது இந்த சிறுமணி!

அப்போது அவன் சொன்னான்... ''நான் தனியா மணி அசைக்கிறதை விட இப்ப வந்த சத்தம் நல்லா இருக்கு!''

''ஏன்?'' மாலினி கேட்டாள்...

''ரெண்டு பேரு கையும் சேர்ந்திருக்கே...... அதனாலதான்...''

மாலினி வெட்கித்து அவனுடைய மார்பில் சாய்ந்தாள்... அவன் அவளை அப்படியே கட்டிப் பிடித்து முத்தமிட்டான்...

எவனோ தேர்மணியை அசைக்க அவன் நினைவு அறுந்து விழுகிறது... சிங்காரம் திரும்பிப் பார்த்தான்... அங்கிருந்தவன் நல்லுசாமி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சிங்காரம்! இங்கதான் இருக்கியா? ஒன்னய எங்கங்க தேடுறது! ஒனக்கு தெரியுமா? பாம்புகல் ரோட்டு கடை மொதளாளிய வெட்டி கடையில போட்டு எரிச்சிட்டானுக... அவருட்டு மனுசியையும் புள்ளைகளையும் கெடுத்து தேயிலை தோட்டத்துல போட்டானுகளாம்...

இப்ப அவங்கள கோயிலுக்கு கொண்டாந்திருக்காங்க...''

சிங்காரம் ஓடினான்... அவனுக்கு முன்னால் நல்லுசாமி ஓடினான். இருவரும் கோயில் காரியாலயத்திற்குப் போனார்கள்... அங்கே கிழித்துப் போட்ட நாராக படுக்கையில் கிடத்தப்பட்டிருந்தார்கள்...... இத்தனை நாளும் 'காத்து' வந்ததை 'காவு' கொடுத்துவிட்டதற்கு அடையாளமாக இருந்தன அவர்கள் தேகம்...

அவனுக்கு மயக்கம் வரும் போலிருந்தது... அடுத்த சில நிமிடங்களில் அவர்கள் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகப்பட்டார்கள்... பாம்புகல் ரோட்டு கடை முதலாளியையா எரித்துவிட்டார்கள்? நேர்மையாக வர்த்தகம் செய்த அவரின் கரங்கள் தான் பலருக்கும் அள்ளிக் கொடுத்தன...... அவரையா?... ஓ... நாட்டுக்கு என்ன நடந்துவிட்டது? ... பெரும்பான்மை என்ற ஒரேயொரு மமதை சிறுபான்மை மக்களை அழிக்கத் தூண்டுகிறதோ! இவர்கள் என்ன தான் செய்தார்கள்! இந்த மண்ணுக்காக உழைத்ததைத் தவிர வேறு எதுவுமே தெரியாதவர்கள்! உழைப்புக்கேற்ற கூலிக்காக மட்டுமே போராடியவர்கள்! இவர்களுக்கு அகிம்சை தான் ஆயுதம்! இவர்களை ஏன் அடிக்க வேண்டும்?... ஓ... மண் மாதாவே! உனக்கு சாதி - சமய நிறபேதம் தெரியாதாம்... அப்படியானால் இந்த உழைக்கும் மக்களின் ரத்தக்கறை உன் மீது பட்டுள்ளதே... அதனை எப்படி அனுமதித்தாய் .. ஓ... நீ கண்களை மூடிவிட்டாயோ!

சிங்காரம் மனமொடிந்த நிலையில் அந்த அகதி முகாமின் ஒரு பக்கத்தில் ஒதுங்கியிருந்தான்... அவனுக்கு மாலினியைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணமே வரவில்லை... மாலினி அவனை அகதி முகாமில் தேடிக்கொண்டேயிருந்தாள் சிங்காரம் தன்னை ஒதுக்கி வருகிறான் என்பது அவளுக்கு மெல்ல மெல்ல புரியத் தொடங்கிவிட்டது...

ஃ ஃ ஃ

ஒரு பெரிய அண்டாவைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்தது ஒரு கோஷ்டி... உண்மையில் ஒரு அண்டாவைக் குறைந்தது எட்டுபேர் தூக்க வேண்டும் . ஆனால் அந்த அண்டாவை ஐந்து பேர் தூக்கினார்கள்...



''யாராவது ஓடி வாங்கப்பா... ஒதவி செய்ங்கப்பா...'' என்று ஒருத்தர் கத்தினார். அவர்களைப் பார்த்துக் கொண்டேயிருந்த சிங்காரம் 'டக்' கென்று அந்த கோஸ்டியோடு இணைந்தான்...

''ஒங்க மாதிரி நெறைய பேரு வந்து ஒதவி செஞ்சா நல்லா இருக்கும்! எல்லாம் அகதியா இர்திகிட்டா யாரு தம்பி தொண்டரா வேலை செய்வா?''

அவர் சொன்னது அவனுக்கு நியாயமாகப்பட்டது... இந்தப் பெரிய கூட்டத்தில் ஓடியாடி வேலை செய்ய நிறைய பேர் தேவை... அதற்கு சம்பளத்திற்கு ஆள் பிடிக்க முடியாது. இங்கே தான் தொண்டர்களை உருவாக்க வேண்டும்... சிங்காரம் அந்த நிமிடத்திலிருந்து ஒரு தொண்டராக மாறினான்...

சிங்காரத்திற்கு அந்த அகதி முகாமில் தொண்டராக வேலை செய்வது பிடித்திருந்தது... முகாமில் வேலை இல்லாமல் 'அம்மா, இருக்க குறிப்பாக மாலினியின் பார்வையிலிருந்து அவனின் நினைவுகளிலிருந்து விலகி நிற்க இந்த தொண்டர் வேலை அவனுக்கு உதவியது... அன்று பகல் உணவை பரிமாறுவதில் சிங்காரம் மும்முரமாயிருந்தான்... அந்த நேரத்தில் சிகிச்சை நிலையத்தியிருந்து ஒலி பெருக்கி அவனை அழைத்தது... வேலையைப் போட்டுவிட்டு என்னவோ ஏதோவென்று பதறியவாறு போனான்.

சிகிச்சை நிலையத்தில் பிச்சைக் கிழவன் தள்ளுவண்டியில் படுத்திருந்தான். அவன் பயந்து போனான் ஆண்டிக் கிழவனுக்கு என்ன ஆகிவிட்டது. சிங்காரம் கிழவனின் கையைப்பிடித்து கலங்கினான்... ''நெஞ்சில திடீர்னு வலிப்பா... அடிக்கடி வர்ர வலி தான்! ரெண்டு மூணு ஊசி போட்டா சரியாப் போயிரும்.''

தனக்குத்தானே கிழவன் ஆறுதல் சொன்னான்... ''இப்ப கவுருமெண்டு ஆஸ்பத்திரிக்கு போறேன்... நீ மாலினிய கைவிட்டுராதே!...நேத்து வந்து அழுதா...உன்னய நம்பி தாய்—தகப்பனை வுட்டுட்டு வந்திருக்கா.. அவளை ஏமாத்திராதே! கைவிட்டுராதே...'' என்ற கிழவன் அவன் முகத்தைப் பார்த்தவாறு கேட்டான்... ''ஆமா......சிங்காரம்! ஏன் அவளை நீ ரெண்டு நாளா பார்க்கல்ல...''

அவன் பொய் சொல்லி சமாளித்தான்...ஓ இந்த 'பொய்' எத்தனை பேருக்கு கைகொடுக்கிறது!

''இல்ல...தாத்தா! இப்ப நான் இங்கே தொண்டரா வேலை செய்யிறேன். அதனால பார்க்க முடியல்ல...''

''சரிப்பா அவளை கைவிட்டுராதே!...''

அடுத்த சில நிமிடங்களில் கிழவனை சுமந்துகொண்டு அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்புலன்ஸ் வண்டி ஆஸ்பத்திரிக்கு ஓடியது.

ஃ ஃ ஃ

மறுபடியும் ஒருநாள் ஒலி பெருக்கி அவன் பெயரைச் சொல்லி அழைத்தது......சிங்காரம் பயந்துவிட்டான்.....ஆஸ்பத்திரிக்குப் போன கிழவனுக்கு என்னமும் ஆகிவிட்டதோ!...

சிங்காரம் கோயில் காரியாலயத்திற்கு ஓடினான்...

''வாங்க...தம்பி......''

''உங்களை நம்பி ஒரு முக்கியமான பொறுப்பை கொடுக்க போறேன்...இங்கே வந்திருக்கிற-வருகிற அகதிகளை நீங்க பேரு-ஊரு விபரம் கேட்டு பதியவேண்டும்......அதுதான் உங்கவேலை...'' கோயில் கமிட்டியைச் சேர்ந்தவர் சொன்னார்...

அடுத்த சில நிமிடத்தில் வெய்யில் நெருப்பாக கொளுத்திய போதும் கோயில் மைதானத்தில் மேஜை-நாற்காலி போடப்பட்டது...அதில் சிங்காரம் உதவியாளனோடு உட்கார வைக்கப்பட்டான்...காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகிற வேலை அந்திசாயும் வரை நீடித்தது. ஆரம்பத்தில் சிங்காரத்திற்கு சந்தோஷமாக இருந்தது...போகப்போக அந்த நாற்காலி முள்ளாகத் தைக்கத் தொடங்கியது. அப்போதுதான் பெரிய பதவிகள் பார்க்க அழகாக இருந்தாலும் அது முள்ளின் மேல் இருப்பதற்கு சமம் என்பதை அவன் உணரத் தொடங்கினான்... ஒரு நாளைக்கு இருபது பக்கங்கள் பெயர் விபரங்களை பதிந்தான்... கோயிலின் உள்ளே இருந்தவர்களை தோட்டவாரியாக அழைத்து பதிந்தான். அங்கு பெயர் கொடுத்த ஒவ்வொருத்தரையும் தனித்தனியாக பார்த்துக்கொண்டான்...

நேற்றுவரை தோட்டங்களில் உழைத்த தொழிலாளர்கள் இன்று அகதிகளாக வந்திருக்கிறார்கள். இவர்கள் அகதிகளா? ஓ...எப்போதும் இவர்கள் அகதிகள் போல்தானே இருக்கிறார்கள்...லயத்தில் பார்த்ததற்கும் இப்போதும் என்னவித்தியாசம்? அப்படியானால் இவர்கள் அகதிகள் தானே! ஆம் எப்போதும் இவர்கள் நிரந்தர அகதிகள்......! அவர்களுக்கு இந்த நாடு வகுத்த எல்லையே அகதிகள் வாழ்கிற லைல்லைதான்.. உலகில்உள்ள அகதிகளுக்கு உடை-உணவு-இடம் உழைக்காமல் கிடைக்கிறது. ஆனால் இவர்களுக்கோ அவைகள் உழைத்தால்தான் கிடைக்கிறது!

டெலிவிசன்வந்துவிட்ட காலத்தில் கூட அவர்கள் இன்னமும் விபரம் தெரியாதவர்களாகத்தான் இருக்கிறார்கள். உலகமே இன்று சொந்தமாக்கிக் கொண்ட 'கல்வி' இவர்களுக்கு மட்டும் ஏன் அந்நியமாகிவிட்டது...

நேற்று ஒரு சம்பவம்.......ஒரு குடும்பத்தை பெயர் கேட்டு விபரம் பதிந்தான்.

''பேரு...''

''முனியாண்டி...''

''வயசு...''

''நாப்பதுக்கு மேலே இருக்கும்...''

''நாப்பதுக்கு மேலன்னு கரெக்டாய் சொல்லுங்க......''

''கரெக்டா சொல்றதுக்கு பொறந்த ஆண்டு தெரியாதுங்க...''

அப்புறம் சிங்காரம் முனியாண்டியைப் பார்த்து 'குத்து' மதிப்பில் வயதைக் குறித்தான்...

''என்னென்ன எரிஞ்சி போச்சி...அதுட பெறுமதி ''

''நமக்கிட்ட பெறுமதியானது எதுவும் இல்லிங்க...ஆனா சிட்டிசன் சிப் கொப்பி எரிஞ்சு போச்சுங்க..! அதான் கவலைப்படுறேன்...''

சிங்காரத்திற்கு முனியாண்டியைப் பார்த்தபோது பாவமாக இருந்தது. தன் காம்பராவில் இருந்த பொருட்கள் எரிந்ததற்கு கவலைப்படாதவன் அந்த நாட்டு பிரஜையாக்கப்பட்டதற்கு அத்தாட்சியாகக் கொடுக்கப்பட்ட வெறும் காகிதம் எரிந்ததற்கு அழுகிறானே! ஓ...வெறும் காகிதம் அது? இல்லை! இந்த நாட்டுக்காக உழைத்து வந்த இனத்தை நாடற்றவராக ஆக்கப்பட்ட போது அவர்கள் ஒவ்வொருத்தரும் இந்த நாட்டில் வாழ ஒரு லைசென்ஸ் அதற்கு பெயர் சிட்டிசன்சிப் அது கிடைக்காதவர்கள் அகதியாக தாயகம் திரும்ப வைக்கப்பட்டார்கள்! இரண்டும் கிடைக்காதவர்கள் நாடற்றவர்கள் ஆக்கப்பட்டார்கள்...!

அன்று கடைசியாக பெயர் விபரத்தை பதிந்துவிட்டு நிமிர்ந்து பார்த்தபோது மாலினிதான் நின்றுகொண்டிருந்தாள். மாலினி பெயர் பதியத்தான் வந்திருக்கிறாளோ?

சிங்காரம் எதுவும் பேசாமல் அவளைப் பார்த்தான் .....அவள் தன் உணர்ச்சிக்கு உருவம் கொடுக்காமல் கண்களால் சாடை காட்டினாள். கண்கள் கலங்கி வந்தன......

சிங்காரம் அவள்அருகேபோய், ''இங்கெல்லாம் வந்து தொந்தரவு கொடுக்கவேணும்! இப்ப நான் ஒரு வேலைய பாரமெடுத்திருக்கேன்.........நீ போயி நம்ம தோட்டத்து ஆளுகளோட இரு! நான் இங்கதான் இருக்கிறேன்...'' என்று சொல்லிவிட்டு பதிவேட்டோடு காரியாலத்திற்கு போனான்......

மாலினி அழுதுகொண்டே போனாள்......

ஃ ஃ ஃ

நாலு நாட்களின் பின்னர் ஒரு நாள் அன்று என்ன நடந்ததோ தெரியவில்லை அகதிகள் அன்று லொறிகளில் வந்து குவியத் தொடங்கினர்கள். சிங்காரத்துக்கு எதுவும் புரியவில்லை. இனக் கலவரம் நின்றுவிட்டது என்று நினைத்தபோது புதிய அகதிகள் வந்து இறங்கிவிட்டார்கள். அந்த மாவட்டத்தின் எல்லையில் இடம்பெற்ற கலவரத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள்தான் அவர்கள். அவர்கள் அத்தனை பேரும் ரப்பர் மரத்தோட்டத்தைச் சார்ந்த தொழிலாளர்கள்.

சிங்காரத்துக்கு அன்று வேலை அதிகமாகிவிட்டது போல் தெரிகிறது. லொறிகளில் இருந்தவர்களை வரிசையாக நிறுத்தி விபரம் பதிய வைத்தார்கள். அனுமான் வால்போல் வரிசைநின்றிருந்தது. அதில் அதிகமானோர் கட்டிய துணியோடு வந்திறங்கினார்கள். இன்னமும் அவர்கள் முகத்தில் பயம் போகவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரம் வேகமாக விபரங்களைப் பதிந்தான். அவர்கள் அத்தனைபேரினதும் முறைப்பாடு எதனையும் ‘எடுத்துவர’ முடியவில்லை என்பது தான். மலையேறி தாக்க மாட்டார்கள் என்ற தைரியத்தில் அவர்கள் எந்த ஏற்பாடும் செய்யாமல்இருந்துவிட்டார்கள்.

‘‘நாசமாப் போனவனுக இந்த மாதிரி பன்னிட்டானுகளே! ஒண்ணு திண்ணு ஒண்ணுகெடந்து - ஒண்ணு இருந்து இந்தமாதிரி செஞ்சானுகளே! ...’’ அந்தக் கூட்டத்தில் இருந்த ஒரு கிழவி ஒப்பாரி வைத்தாள்..

சிங்காரம் ‘‘யாரு?’’ என்று கேட்டான்.

‘‘பக்கத்து நாட்டுல இருந்த சிங்களவனுகதான்’’...

சிங்காரத்துக்கு மாலினியின் ஞாபகம் தான் வந்தது. இனி மேல் அவளோடு ..

பகல் இரண்டு மணியிருக்கும் சிங்காரத்துக்கு தூக்கம் வரும் போலிருந்தது.. ஆனாலும் அவன் அதனை அடக்கி தன் வேலையைக் கவனித்தான். இன்னும் கொஞ்சப் பேர்தான் இருந்தார்கள்.

இரண்டு லொறி அகதிகளைக் குறிப்பெடுத்துவிட்டான்.

அவன் பெயர் - விபரம் பதிகிறான்.

‘‘பேரு...’’

‘‘பியதாசா’’......

சிங்காரத்துக்கு ‘வியப்பாக’ இருந்தது. மறுபடியும் பெயரைக் கேட்டான். அவன் அதே பெயரைத்தான் சொன்னான். அவனுக்கு புரியவில்லை.. பியதாசா.. சிங்களப் பெயர் ஒரு சிங்களவன் அவன் ஏன் இந்த அகதிமுகாமுக்கு வருகிறான்?

பெயரை பதியாமல் நிமிர்ந்து பார்த்தான் அவன்... அரைகுறை தமிழில் பேசினான். ‘‘சிங்களவனை நான் ஏன் முகாமுக்கு வந்திருக்கேனு தான் நீங்க பார்க்கிறீங்க! நான் வேரகம ரப்பர் தோட்டத்தில் தமிழ் ஆள்களோட லயத்தில இருந்து வேலை செய்யிறவன். நான் கல்யாணம் கட்டியிருக்கிறது ஒரு தோட்டத் தமிழ்ப் பொம்பள.. பேரு லச்சுமி.. ’’

சிங்காரத்துக்கு ‘பொட்டில்’ அடித்தது போலிருந்தது. பியதாசாவுக்குப் பக்கத்தில் ‘லச்சுமி’ நின்று கொண்டிருந்தாள். சிங்களப் பெண்ணை மணந்தவர்களும் தமிழ்ப் பெண்ணை மணந்தவர்களும் அகதிகளாக வந்திருக்கிறார்கள். கலப்புத் திருமணத்தால் தேசியத்தை உருவாக்கலாம் என்று சொன்னவர்கள் எங்கே?

‘‘நல்ல தாய் - தகப்பனுக்கு பொறந்தவனுக இந்த அநியாயாம் செய்ய மாட்டானுக! ஆனா இவனுக என்னத்தைப்பண்ணினாலும் எங்க ரெண்டுபேரையும் பிரிக்க முடியாது! ’’ என்ற பியதாசா லச்சிமியைப் பார்த்தான்.; இருண்டிருக்கிற அவள் முகத்தில் ஒரு பிரகாசம்!

எங்கே அழைத்துச் செல்வது போன்ற ஒரு உணர்வு அவனுக்கு. பியதாசாவை ஏறிட்டுப் பார்க்கத் தயங்கினான். தமிழர்களை அடிக்கிற சிங்களவர்கள் மத்தியில் இந்த பியதாசா ஒரு மனிதன்-அதற்கு மேல் ஒரு மகாத்மா.

அவனுடைய நிழலில்கூட நிற்கக் கூட தனக்கு தகுதியில்லை; என்ற நினைப்பு அவனுக்கு...... தன்னை மன்னிக்கக் கோருவது அவன் கண்களைப் பார்த்தான்.

அன்று இரவு நாலுபேர் சுற்றி வர இருந்தும் அதைப் பெரிதுபடுத்தாத சிங்காரம் மாலினியின் கண்ணீர்த் துளிகளைத் துடைத்து விட்டு அவளை அப்படியே கட்டிப் பிடித்துக் கொண்டான். மாலினிக்குஎதுவுமே புரியவில்லை உங்களுக்கு ஏதாவது புரிந்ததா?...



# மலையக சிறுகதைச் சிற்பி

ஒரு சமுதாயத்தின் மாற்றம் அச் சமுதாயத்தின் இலக்கியத்திலும் பிரதிபலிக்கப்படுவது தவிர்க்க முடியாத அம்சமாகும். இத்தகைய சமுதாய விழிப்புணர்வானது அவ்வக் கால கட்டங்களில் இலக்கியத்தில் பிரதிபலித்துள்ளமையை நாம் காணக் கூடியதாக உள்ளது. இதனை நாம் மலையக சிறுகதை சிற்பியான என். எஸ். எம். ராமையாவின் ‘‘ஒரு கூடைக் கொழுந்து’’ சிறுகதைத் தொகுதியில் அவதானிக்கக் கூடியதாக விருக்கிறது.

மலையக மக்களின் துன்ப துயரங்களை அவர்களின் யதார்த்த பூர்வமான வாழ்க்கையை பலையக படைப்புகளில் அறிந்து கொள்ள முடியும். மலையக சிறுகதைக்கு உருவம் கொடுத்தவர் என மலையக சிறுகதை எழுத்தாளர்களாலேயே பாராட்டப்பட்டவர் என். எஸ். எம். ராமையா. இவரது ‘ஒரு கூடைக்கொழுந்து’ என்ற சிறுகதைத் தொகுதியை படித்துப் பார்த்தால் அவைகள் உழைக்கும் மக்களின் வாழ்க்கையிலிருந்து முகிழ்ந்திடுகின்றன. இவரது சிறுகதைகளில் மலையக மக்களின் துயர நிகழ்வுகள் மனதை தொடும் விதத்தில் இழையோடுகின்றன. இந்தச் சிறுகதைகளின் மூலம் கடந்த கால மலையகத்தை நம்மால் தரிசிக்க முடிகிறது. இந்த சிறுகதைகளில் காணப்படும் பாத்திரங்கள், சம்பவங்கள் வாழ்வோடு வரலாற்றோடு பின்னிப்பிணைந்து விட்டன.

என். எஸ். எம். என்று நண்பர்களாலும் இலக்கிய வட்டத்திலும் அன்புடன் அழைக்கப்படும் நாராயணன் மெய்யப்பன் ராமையா என்பதே இவரது முழுப்பெயராகும். பதுளை ரொக்கில் தோட்டத்தில் 27-1-1931 இல் பிறந்த இவரது மணிவிழாவுக்கு இன்னும் இரண்டு ஆண்டு பாக்கியிருக்கின்றன. இன்னும் நண்பர்களை இலக்கியவாதிகளை சந்தித்தால் போதும் தன்னையும் தன் சூழலையும் மறந்து இலக்கியம் பற்றியும், மலையக எழுத்தாளர்களின் இலக்கிய பங்களிப்புப்பற்றியும், மலையக எழுத்தாளர்களின் இலக்கிய பங்களிப்பு பற்றியும் மணிக்கணக்கில் பேசுவதில் சளைக்க மாட்டார்.

இன்று மலையகசிறுகதைகளைப் பற்றி பேசுவதானால் என். எஸ். எம். ராமையாவை குறிப்பிடாமல் யாரும் பேசமுடியாது. மலையக சிறுகதை முன்னோடியான இவர், தனது இலக்கியப் பணியை வானொலி நாடகம் மூலம் தான் ஆரம்பித்துள்ளார். வானொலியில் ‘சாணு’ என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ழைக்கப்படும் சண்முகநாதன் நாடகத் தயாரிப்பாளராக பணியாற்றிய காலகட்டத்தில் என். எஸ். எம் எழுதும் நாடகங்களைக்கேட்டு சுவைப்பதற்கு ஒரு சுவைஞர் கூட்டமே இருந்தது. இவரது 'ஒரு மின்னல்' என்ற நாடகத்தை இன்றும் பாராட்டி கூறுவார்கள்.

இவரது வானொலி நாடகங்களில் எதிரொலி, தலைவர் வீட்டுக்கல்யாணம், தாமரைக்குளம், ஞானக்கண், பாலை நிலம் போன்ற நாடகங்களை குறிப்பிட்டுக்கூறலாம். இவரது நாடகங்களில் நடித்த எஸ். எம். ஏ. ஜப்பார் இன்றும் தமிழகத்தில் வானொலியில் தன் திறமையை வெளிப்படுத்தி ஜாம்பவானாக திகழ்கிறார். மறைந்த வானொலி, மேடை நடிகர் ரொஸாரியோ பீரிஸ் போன்றவர்களை குறிப்பிடலாம்.

ஈழத்து தமிழ் இலக்கியத்துக்கு மலையக இலக்கியம் புது இரத்தம் பாய்ச்சியது என பெருமையுடன் குறிப்பிட்ட விமர்சகரும், பேராசிரியருமான கலாநிதி கைலாசபதி அவர்கள், 'தினகரன்' ஆசிரியர் பீடத்தில் அமர்ந்திருந்த பொழுது, இவரது வானொலி நாடகங்களைக்கேட்டு மலையககளனாகக்கொண்ட கதைகளை எழுதும்படி கேட்டாராம் இதனை தனது நண்பனும், இலக்கிய ஆர்வலனுமான திரு. ஆர். கனகரத்தினத்திடம் என். எஸ். எம். கூறினாராம். கனகரத்தினமும் இவரை சிறுகதைகள் எழுதும்படி கூறினாராம்.

இவர், தான் வாழ்ந்த மண்ணின் அனுபவத்தை 'ஒரு கூடைக் கொழுந்து' சிறுகதை எழுதி நண்பரான கனகரத்தினத்திடம் காட்டினாராம். கனகரத்தினம், அதனை வாசித்து பின்னர் சில ஆலோசனைகளைக்கூறினாராம். கதை மீண்டும் திருத்தி எழுதப்பட்டு 'தினகரனில்' பிரசுரமானது (4.6.61)

சிறுகதை வெளிவந்த மறுவாரமே கலா விமர்சகரான கனக செந்திநாதன் 'ஒரு கூடைக் கொழுந்து' கதையைப் பாராட்டி வீரகேசரியில் எழுதியதுடன் என். எஸ். எம். ராமையாவைப்பாராட்டி நேரடியாக கடிதம் எழுதினார். ''இந்தக் கதையின் தனிச்சிறப்பு'' மலைநாட்டு வாழ்க்கை முறை இன்னது என்பதற்கு ஒரு நல்ல மாதிரிக் கதையாக இது அமைந்திருப்பது, சமீப காலத்திய இலக்கிய வளர்ச்சியின் தவிர்க்க முடியாததும் வரவேற்க வேண்டியதுமான ஒரு விளைவே, மலைநாட்டுப் பிராந்திய இலக்கிய வளர்ச்சிக்கு அடி எடுத்துக் கொடுக்கும் வகையில் இந்த குறிப்பிடத்தக்க சிறுகதை தோன்றியிருப்பது'' என்று 'புதுமை இலக்கியம்' சஞ்சிகை விமர்சித்தது.

என். எஸ். எம். ராமையா குறையவே எழுதினாலும் இலக்கிய உலகில் நிறைவான இடத்தைப் பிடித்துக் கொண்டார். இவரது பன்னிரண்டு சிறுகதைகள் 'ஒரு கூடைக் கொழுந்து' என்ற மகுடத்தில் 1980-ம் ஆண்டு வெளியாகியதுடன் அரசின் சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றது.

இவரது சிறு கதைகள் தமிழ் நாட்டு 'மஞ்சரி' மறுபிரசுரஞ் செய்தது. தரமான இலட்சியப் படைப்புகளை வெளியிடும் வாசகர் வட்டம் வெளியிட்ட ''அக்கரை இலக்கியம்'' என்ற தொகுப்பில் இவரது வேட்கை இடம்பெற்றிருக்கிறது. ஆசிய நாடுகளில் தெரிவு செய்யப்பட்ட சிறுகதைகளில் ஒன்றான இவரது 'வேட்கை' ஏசியன் ஜர்னலில் இடம் பெற்றுள்ளது. 'செக்' சோவியத் மொழிகளில் இவரது கதைகள் வெளிவந்துள்ளன.

''1960 களில் எழுத்துத் துறையில் நுழைந்த என். எஸ். எம். ராமையா தன் எழுத்தின் வளத்தால் கடல் கடந்த இடங்களில் கௌரவத்தைப் பெற்றிருக்கிறார். குறைவாக எழுதி, கணிசமான வாசகர்களின் கவனத்தை ஈர்த்திருக்கிறார். மலையகம் என்ற பிராந்தியத்திற்கேயுமே விசேஷமான தன்மைகளைக் கொண்டெழுந்த மலையக சிறு கதை இலக்கியத்திற்கு உருவம் அமைத்தவர் என்றவகையில் ராமையா வரலாற்று முக்கியத்துவம் பெறுகிறார்'' என மு. நித்தியானந்தன் குறிப்பிட்டிருப்பது எத்தகைய யதார்த்த பூர்வமான உண்மையாகும்.

— அந்தனிஜீவா

## மகாத்மா காந்தியடிகளின் கருத்துரைகள்

1. மிதமாகப் பேசு.
2. எவர் எது சொன்னாலும் கேட்டுக்கொள். உனக்குச் சரியென்று தோன்றுவதைச் செய்:
3. ஒவ்வொரு நிமிடத்தையும் முக்கியமாகக் கருதிக் குறித்த நேரத்தில் குறித்த வேலையைச் செய்.
4. ஏழைபோல் வாழ். செல்வத்தில் பெருமை கொள்ளாதே.
5. நீ செய்யும் செலவிற்குக் கணக்கெழுது
6. மனம் ஒன்றிக் கல்வி கற்றுக்கொள்
7. நாள்தோறும் உடற்பயிற்சி செய்.
8. அளவோடு சாப்பிடு.
9. நாள் தவறாமல் நாட்குறிப்பெழுது.

மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் 25 அனுப்பி ''படிப்பினை'' என்னும் நூலையும் அழகிய காந்தியடிகள் ஸ்ரிக்கரையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம். யாழ்ப்பாணம்.
த. பெ. 77.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வௌவால் தகவல்கள் ● இந்திரஜித்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் அவர்கள் தனது நாடாளுமன்ற பேச்சொன்றின் போது சாரல்நாடன் எழுதிய 'தேசபக்தன்' கோ. நடேசய்யர் நூலை மேற்கோள்காட்டியும், தனது பேச்சின் போது அந்த நூலை சபையிலே பிற அங்கத்தவர்களுக்குக் காண்பித்தும் இருக்கின்றார் என்பதும் மகிழ்ச்சிகரமான செய்தியாகும்.

மலைநாட்டு மக்களுக்கு இப்படி ஒரு பெருமைமிகுந்த பாரம்பரியம் இருக்கின்றதென்பது நமக்கு இதுவரையிலும் தெரியாமல் போய் விட்டதே என்று மனப்பூர்வமாக இந்த நூலை வாசித்தப் பல கல்விமான்களும் ஒததுக் கொள்கின்றனர்.

எந்தவித பிரதியுபகாரத்தையும் எதிர்பார்க்காமல் பிரதியுபகாரம் என்பது பதவி, பணம், பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்புக்கான அங்கீகாரம் என்ற விதத்தில் ஒன்று-மலையக வெளியீட்டகத்தினர் இந்த நூலை வெளியீட்டிருக்கின்றார்கள்.

இந்த நூலில் நடேசய்யரின் பிறந்ததினத்தைப் பற்றி எந்த விதமான குறிப்பும் இல்லையே என்று சிலர் குறை கூறுவதையும் கேட்க முடிகின்றது.

நடேசய்யரின் பிறந்ததினத்தை அறிய முடிந்தால் மிகச் சிறப்பாக மலை நாடெங்கும் அவரது பிறந்த தினத்தைக் கொண்டாடலாம் என்ற இதய சுத்தியான ஆசையாலோ, அவருக்கு முத்திரை வெளியிடும்படி ஆட்சியாளரிடம் கோரிக்கை விடுக்க வசதியாயிருக்குமே எண்ணமுடியாது. குறைகூறும் நோக்கே இலக்காயிருக்கின்றது.

"பிறந்த தினத்தைத் தெரிந்தவர்கள் அறியத்தாருங்கள், இரண்டாம் பதிப்பில் சேர்த்துக் கொள்கிறேன்" என்று சாரல் நாடன் நூல் அறிமுகவிழாவில் பேசியபோது கூறியிருந்ததையும் நாம் இங்கு நினைவுபடுத்திக் கொள்வது அவசியம்.

"சுப்பிரமணிய பாரதியார் மரணித்தபல வருடங்களுக்கு அவரது நினைவு ஜயந்திதான் கொண்டாடப்பட்டது. அதற்குக் காரணம் அவரது பிறந்த நாள் தெரியாமலிருந்நதேயாகும். அவர் மரணமான தினம் பலருக்கும் தெரிந்த ஒன்று. எனவே, அவரதுப் பிரிவை உணர்ந்த சமகாலத்தவர்கள் அன்றையதினத்தை அவரது நினைவுதினமாக நாடு தழுவிய விதத்தில் கொண்டாட ஆரம்பித்தனர். பாரதியாரின் மரண தினத்தில் பாரதிவிழா கொண்டாடுவதை விடுக்க வேண்டுமென்று பாரதிபக்தர்கள் விரும்பியபோது, அவரது "ஜன்மதித்தைக்" கண்டுபிடிக்க ஆராய்ச்சியே செய்யவேண்டியிருந்தது.

பாரதியாருடன் புதுவையில் ஒன்றாக இருந்தவரும் பாரதியார் பணியாற்றிய 'இந்தியா' பத்திரிகையின் நிறுவனர்களில் ஒருவருமான ஆச்சாரியர் உதவியும், பாரதியாருடனிருந்த குவளை கிருஷ்ணமாச்சாரியாரின் உதவியும் பெறப்பட்டது. ஹிந்துஸ்தான் ஆசிரியர் குழாத்தைச் சேர்ந்தவர்கன் புதுச்சேரிக்கு இரண்டுமுறை யாத்திரை மேற்கொண்டு தீர, தெரிந்த மட்டும்விசாரணை செய்தார்கள்; பாரதியாரைப் பற்றி பல தவறான செய்திகள் அடிப்பட்டு போனது அதன் பின்னரேயாகும். அந்த ஆசிரியர் குழாம் செய்த தீவிர முயற்சிகளினால் 1938, 1939-ம் ஆண்டுகளில் பாரதி மலர்கள் வெளியாயின. அந்த மலர்களிலும் ஒன்றிரண்டு பிழைகள் நேர்ந்துள்ளன என்பதை 'கிராம ஊழியன்' கட்டுரையொன்று (பாரதியார்-சில சந்தேகங்கள் – 1-11-43) வெளிப்படுத்துகின்றது.

தி. ஜ: ர. எழுதியுள்ள "பாரதி சரிதம்" குறிப்பிட்ட பாரதியார் பிறந்த தினம் பிழையென நிறுவப்பட்டதும், பாரதியாரைப் பற்றிய இன்றைய நாமறிந்த தகவல்கள் பரப்பப்பட்டதும் இந்த ஆய்வுகளுக்குப் பின்னாலேயே" என்று விளக்கிய சாரல் நாடன் "நான் பல விதங்களிலும் திருப்திப்படுத்திக்கொண்ட தகவல்களையே எனது நூலில் தந்துள்ளேன். நூலில் சில தகவல்கள் தரப்படவில்லையென்றால், அது குறித்து நான்பெற்ற தகவல்கள் திருப்திதருவனவாகயில்லையென்பதை இந்த 'முட்டையில் மயிர் பிடுங்கும் பேர்வழிகள்' ஏன் உணர்கின்றார்களில்லை" யென்று ஆத்திரப்பட்டார்.

அவர் ஆத்திரப்படுவது ஒரு விதத்தில் நியாயமானதாகவே படுகின்றது.

நடேசய்யர் உருவ அமைப்பு எப்படியிருந்தது என்பதே எம்மில் பலருக்குத் தெரியாது. இந்த நிலையில், 'தேச பக்தன்' கோ. நடேசய்யர் நூலின் அட்டையை அப்படியே 'புளொக்' பண்ணி தமது பத்திரிகையில் போட்டும், அந்த நூலில் தரப்பட்டுள்ள தகவல்களைத் திரட்டி ஒருகட்டுரையைத்தயார் பண்ணியும் தமது பத்திரிகையில் முழுப் பக்க அளவில் பிரசுரிக்கும் தர்மவான்கள் இந்த நூலைப்பற்றி ஒரு வரியேனும் குறிப்பிடாதிருப்பது கற்றறிந்த பலரின் கண்டனத்துக்குள்ளாகியிருக்கின்றது. பிறருக்கு பிறந்த பிள்ளைக்குத் தகப்பனென்று தன்னை கூறிக் கொள்ளும் வெட்கங்கெட்டவர்களின் செயலை ஒத்தச் செயல் இது.

சிம்பாப்வே தமிழ்ச்சங்க வெளியீடாக ஆபிரிக்காவிலிருந்து வெளிவந்துள்ள "ஸ்ரீலங்கத் தமிழர்" என்ற வெளியீடும், ஜெர்மனியிலிருந்து வெளிவருகின்ற "சிந்தனை" என்ற பருவ வெளியீடும் மலையகத் தமிழர் பற்றிய சரியான சில தகவல்களைத் தந்திருக்கும்போது இங்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள்ள சிலர், மலைநாட்டு மக்களைப்பற்றிய தங்களது பார்வையில் தவறிழைப்பது வேண்டுமென்றே செய்வதா? அன்றேல், மலைநாட்டு மடையர்கள் பொறுத்துக் கொள்வார்கள் என்ற தான் தோன்றித்தனத்தினலா?

தேசியத்தமிழ் ஏடுகளில்- குறிஞ்சிப்பரல்கள், மலையக மஞ்சரி, மலையகமாருதம் என்ற பகுதிகளில்- வெளியிடப்படுகின்ற சிலரது அறிக்கைகள், சிலஆக்கங்கள் இப்படி எண்ணச் செய்கின்றது.

''தோட்ட எல்லைகளைச் சுற்றியடித்திருந்த முள்ளுக்கம்பிகள் என்ன வாயின?'' என்று கேட்கும் பரிதாபத்துக்குரிய ஒருவர், ''தேயிலை மரங்களில் கொழுந்தெடுப்பதற்கு ஏணியில் ஏறும் என்னருமைச் சகோதரிகள்'' என்றெழுதும் பரிதாபத்துக்குரிய இன்னொருவர் என்று எழுதுபவர்கள் மாத்திரமல்ல இவைகளைத் தமது பத்திரிகைகளில் வெளியிடுபவர்களும் இந்த நிலையிலே தான் இருக்கின்றார்கள்.

இவர்களின் நியாயத்தை எந்த அளவுக்கு மலையக மக்கள் ஒத்துக் கொள்ளப்போகின்றார்கள்?

,புதியகாற்று, மலையகத்தில் வீசத் தொடங்கி விட்டதென்பதை அனைவரும் உணர்தல் அவசியம்.

# நம்மவர்களின் பார்வைக்கு . . .

மத்திய மாகாண சபையில் நம்மவர்களின் பிரதிநிதிகளாக திருவாளர்கள் ஒ. இராமையா, பி. கந்தையா, எஸ். ராஜு, வி. அண்ணாமலை, டப்ளியூ. ரட்ணம், கதிரேசன், வி. புத்திரசிகாமணி, எஸ். சதாசிவம், இராமநாதன் ஆகியோர் உள்ளனர்.

அவர்களின்' பார்வைக்கு, வீரகேசரி 30-8-89 வெளிவந்த கீழ் வரும் செய்தியை சமர்ப்பணம் செய்கின்றோம்.

செய்தி இதோ:-

வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு வட-கிழக்கு மாகாணசபை மேற்கொண்டுள்ள திட்டப்பிரகாரம் பேராசிரியர் அ. சண்முகதாஸ் எழுதிய' பேராசிரியர் வித்தி' என்ற வரலாற்று நூல் சட்டத்தரணி எஸ். சிறிஸ்கந்தராஜா எழுதிய 'சந்ததிச் சுவடுகள்' என்ற நாடகநூல், சி. வன்னியகுலம் எம். ஏ. 'எழுதிய ஈழத்து புனைகதைகளில் பேச்சு வழக்கு என்ற ஆய்வு நூல் சோலைக்கிளி 'எழுதிய எட்டாவது நரகம், அன்புமணி எழுதிய 'ஒரு தந்தையின் கதை' ரவிப்பிரியா வின் 'சந்தன ரோஜாக்கள்' மற்றும் 'ஒரு வானவில் ரோஜா வாகிறது' ஆகிய நூல்களில் தலா 300 பிரதிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாகாண சபை உறுப்பினர் திரு. நா. நேசராசா தலைமையிலான தமிழ் எழுத்தாளர் ஊக்குவிப்புக் குழுவினரின் சிபாரிசைத் தொடர்ந்தே மேற்படி பிரதிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.



# கம்ப்ளி நியூஸ்

A person's words must not be interpreted so as to do him an injustice என்பதை மகாத்மாகாந்தி வேத வாக்காகவே நினைத்தார். 'கம்ப்ளி நியூஸ்' தரும் செய்திகளையும், சொற்களுக்கான அர்த்தங்களையும், இதே மனோபாவத்தில் வாசித்திட - வாசகர்களை வேண்டுகின்றோம்.

+ தோட்டப்பாடசாலை அரசாங்கம் கையேற்கப்பட்ட சூழ்நிலையை பயன்படுத்திக் கொண்டு ஆசிரியர்களுக்காக ஒரு தொழிற்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஆயுட்கால செயலாளர் ஒரு 'ஞான'ப்பழம் இவர் பல லட்சம் மதிப்புள்ள வீட்டை தலைநகரில் சொந்தமாக வாங்கியுள்ளார். இவரை நம்பி சங்கத்தில் சேர்ந்த ஆசிரியர்கள் 'சிவ' 'சிவா' என்று கையை பிசைந்து கொண்டிருக்கின்றனர்.

+ தேயிலையின் தந்தை என்று புகழப்படும் ஜேம்ஸ் டெயிலர் வயது காரணம் காட்டப்பட்டு நூல் கந்தரதோட்டத்திலிருந்து கடைசி காலத்தில் துரை வேலையினின்றும் விலக்கி வைக்கப்பட்டார். அந்த வேதனையிலேயே 1892ல் அவரது உயிர் பிரிந்தது. தேயிலைத் தொழிலும், நன்றி மறந்தலும் இரட்டைக் குழந்தைகள் போதும், தோட்ட மக்கள் 1948ல் நாடற்றவர்களாக்கப்பட்ட நன்றி மறந்த செயலுக்கு இது வரை பூரணமான பரிகாரம் காணப்படாதது இதனுல் தான் போலும்.

+ அடுத்தஆண்டிலிருந்து ஒரு மாதப்பத்திரிகை மலைநாட்டிலிருந்து வெளிவர முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும், மலைநாட்டு நகரங்கள் அனைத்திலும் தமிழ்ப்புத்தக விற்பனை நிலையங்கள் திறக்கப்பட இருப்பதாகவும் அடிபடும் செய்திகள் உண்மையாக இருக்கக் கூடாதே என்று சில தொழிற் சங்கப்பிரமுகர்களும், அவர்களின் அடிவருடி செய்தி சேகரிப்பாளர்களும் ஆண்டவனை வேண்டுகின்றனர்.

+ இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து தமிழகத்தில் புனர்வாழ்வு தேடியிருக்கும் மலைநாட்டு மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் நோக்கில் ஒரு மாதாந்த தமிழ் ஏடு இந்தியாவிலிருந்து வெளிவர இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த இதழ்...!

## ஆண்டு மலர்

கொழுந்து.. ...ீ அடுத்த இதழ் ஆண்டு மலராக பலரவிருக்கின் கின்றது

கொழுந்து இது வரை ஆறு இதழ்கள் வெளிவந்துள்ளது.

அடுத்த இதழ் ஏழாவது இதழ்

ஆண்டு மலராக அதிகபக்கங்களுடன் மலர்கின்றது.

புதிய ஆண்டில் ஜனவரியில் வெளிவரும் என்ற தகவல்களை தெரிவித்துக் கொள்கிறோம். அதன் பின்னர் மாதம் ஓரிதழாக மலரும்.

ஒரு சஞ்சிகையின் வளர்ச்சி வாசகர், விற்பனையாளர் விளம்பரத் தார்கள் தரும் ஆதரவிலேயே தங்கியுள்ளது.

அதனால், கொழுந்து சஞ்சிகையை விற்பனை செய்து உதவும் நல்ல இதயங்கள் விற்பனை செய்த பணத்தை அனுப்பி உதவும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மலையகத்திலிருந்து வெளி வந்த மலைமுரசு முதல் 'தீர்த்தக்கரை'...... வெளிவந்த சஞ்சிகைகளை நாம் அறிவோம்.

அந்த சஞ்சிகைகளுக்கு ஏற்பட்ட 'நிகழ்வு' கொழுந்து இதழுக்கு ஏற்படக்கூடாது என விரும்புகிறோம்.

கொழுந்து மலையக மக்களின் அரசியல், கலை இலக்கிய கல்வி சமூக முன்னேற்றத்தில் அக்கறை கொண்டது.


கொழுந்து மலையக மக்களின் ஒவ்வொருவரின் இல்லங்களை சென் றடைய வேண்டும் என்பதே எமது அவா. அத்துடன் தமிழ்பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் கொழுந்து கிடைக்க வேண்டும் என்பதும் எமது அபிலாஷையாகும்.

இதற்கு கொழுந்து இதழை நேசிக்கும் நெஞ்சங்களின் ஆதரவு என்றும் தேவை.

— அந்தனி ஜீவா —



சில மனப் பதிவுகள்



# ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவிய, சிற்பக் கண்காட்சி

அந்தனி ஜீவா.

யாழ்ப்பாணத்தில் கொக்குவில் ரயில் நிலையத்திலிருந்து கொழும்பு வரை அந்த இனிய நினைவுகளை மீண்டும்......மீண்டும் இரைமீட்டிப் பார்த்தேன்.

நீண்ட இடைவெளிக்கு பின்னர் யாழ்ப்பாணம் சென்றது முகம் தெரிந்த, முகவரி மட்டும் தெரிந்த நண்பர்களை எழுத்தாளர்களை, கலைஞர்களை சந்தித்து உரையாடி மகிழ்ந்தது இனிய சுகானுபவம்.

ஈழத்து நூல் சஞ்சிகை ஓவிய சிற்பக் கண்காட்சிக்கு கட் டாயமாக வரவேண்டும் என்று நேரிலும் கடித மூலமும் அன்புக் கட்டளை போட்ட நண்பர் சோமகாந்தன் (ஈழத்து சோமு) உள்ளூர் உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலாவின் கடிதம், யாழ் சென்று திரும்பவேண்டும் என்ற நம்பிக்கையை ஊட்டியது.

கண்காட்சி ஒக்டோபர் 28, 29-ம் திகதி நடைபெற்றது. அதற்கு முதல் நாளே நானும் மலையக கலை இலக்கியப் பேரவையின் தலைவர் சாரல் நாடனும், பேரவையின் உறுப்பினரான டாக்டர் ராஜேந் திரனும் யாழ் சென்றோம். கொக்குவிலில் வசிக்கும் ஆசிரியர் ஜெய ராஜாவின் பாரதி இல்லம் எம்மை இன்முகத்துடன் வரவேற்றது.

மறுநாள் யாழ். இந்துக் கல்லூரிக்கு சென்றோம். 'நீங்கள் எப் படியும் வருவீர்கள் என்று தெரியும்' என்று அன்புடன் வரவேற்றார் சோமகாந்தன். கண்காட்சியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. டிவகலாலாவின் தலைமையில் முன்னாள் இந்துக் கல்லூரி அதிபர் திரு. என். சபாரத்தினம் தொடக்கிவைத்தார்.

யாழ்ப்பாண உள்ளூராட்சி திணைக்களம் யாழ். ரேட்டறிக் கழகம், யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியுடன் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கண்காட்சியைப் பார்த்ததும் என் விழிகள் வியப்பால் விரிந்தன. ஆயிரக்கணக்கான நூல்கள், சஞ்சிகைகள் மத்தியில் நம் மண்ணின் நிகழ்வுகளை ஓவியங்களாக தீட்டியிருந்த கலைஞர்களின் கலை வண்ணங்கள். அது மாத்திரமல்ல. அந்த ஓவியங்களை, சிற்பங்களையும் செய்து கலைஞர்களை நேரில் சந்தித்து உரையாடுகின்ற வாய்ப்பு ஆகா......எத்தகை இனிமையான சந்திப்பு.

யாழ்ப்பாணத்தில் உயிர் ஓவியமாக நடமாடிக்கொண்டிருக்கும் ஓவியர் அ. மாற்கு அவர்களை சந்திக்கவேண்டும் என்ற அவா, அத்துடன் ஓவியர் ஆ. இராசையா மலையக வெளியீட்டகம் வெளியிட்ட சு. முரளிதரனின் 'தியாக யந்திரங்கள்' கவிதைத் தொகுதிக்கு அட்டைப்படம் படம் வரைந்த ஓவியர் கைலாசநாதன். சிவசாயி சித்திரக்கோட்டத்தின் சிற்பக் கலைஞர் சிவப்பிரகாசம் போன்றவர்கள் மற்றும் 'மறுமலர்ச்சி' குழுவைச் சேர்ந்த எழுத்தாளர் வரதர், கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை சாகித்தியகர்த்தா ந. வீரமணி ஐயர் இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம்.

முதல் நாள் மாலை எழுத்தாளர்கள் கலைஞர்கள் ஒன்றுகூடல் கலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமையில் நடைபெற்றது. அந்த கலந்துரையாடலில் திருவாளர்கள் டொமினிக் ஜீவா, செங்கை ஆழியான், திருமதி கோகிலா மகேந்திரன், சாரல் நாடன், குழந்தை ம. சண்முகலிங்கன், புலவர் ஈழத்துச் சிவானந்தன், ஓவியர் மாற்கு ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

கருத்தரங்கு கலகலப்பாகவும், சிறப்பாகவும் அமைவதற்கு பார்வையாளர்களாக இருந்த எழுத்தாளர்களும், கலைஞர்களும் குறிப்புரை வழங்கினார்கள்.



மறுநாள் ஞாயிறு காலை மேல் மண்டபத்தில் கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டுக்கொண்டிருக்க கீழ் தளத்தில் 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி, எதிர் நோக்கும் பிரச்சினைகள் என்ற தலைப்பில் கலந்துரையாடல் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது.

கருத்தரங்கில் திருவாளர்கள் சோ. பத்மநாதன், கலாநிதி நா. சுப்பிரமணியன், கலாநிதி சபா. ஜெயராசா, க. தணிகாசலம், செம்பியன் செல்வன், நெல்லை க. பேரன், சாரல் நாடன் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

மாலை 'ஈழத்தில் கலை வளர்ச்சி' என்ற தலைப்பில் பேராசிரியர் வி. சிவசாமி தலைமையில் 'நுண் கலைகள்' பற்றி கலாநிதி சோ. கிருஷ்ணராஜா, நாடகக் கலைபற்றி கலாநிதி மௌனகுரு, 'கிராமிய கலைகள்' பற்றி கலாநிதி இ. பாலசுந்தரம், 'மலையக கலைகள்' பற்றி அந்தனி ஜீவா ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள். திரு. சி. இரகுநாதன் நன்றியுரை வழங்கினார்.

அதற்கு அடுத்த நாள் திங்கட்கிழமை நண்பர்களான கலாநிதி சபா. ஜெயராசா, கலாநிதி சி. மௌனகுரு ஆகியோரின் அழைப்புக்கு இணங்க யாழ்ப்பாண பல்கலைக்கழகம் சென்றோம். அங்கு பேராசிரியர் க. சண்முகதாஸ் தலைமையில் ஒரு சந்திப்பு இடம்பெற்றது. கலாநிதி சோ. கிருஷ்ணராஜாவும் கலந்துகொண்டார்.

நாங்கள் தங்கியிருந்த மூன்று நாட்களும் பயனுள்ளதாக அமைந்தது. எழுத்தாள நண்பர்கள் போட்டி போட்டுக்கொண்டு விருந்து படைத்தனர்.

முதல் நாள் அன்று 'நங்கை' சஞ்சிகை ஆசிரியை திருமதி சரோஜா சிவசந்திரன் வீட்டில் தீபாவளி விருந்து. அதன் பின்னர் அங்கு டொமினிக் ஜீவா, கலாநிதி மௌனகுரு, திரு திருமதி சிவசந்

---

அட்டையில்......

மலையக இலக்கிய சிற்பியான என். எஸ். எம். ராமையாவே அட்டையில் இடம் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரன், சாரல் நாடன் ஆகியோருடன் சுவையான கலந்துரையாடல் பலதும் பத்தும் எமது பேச்சில் இடம்பெற்றது.

மறுநாள் திரு. சு. டிவகலாலா தலைமையில் எங்களுக்கு திரு. சோமகாந்தன் தம்பதிகள் விருந்தளித்து கௌரவித்தனர். மூன்றும் நாள் கலாநிதி மௌனகுரு தம்பதிகள் வீட்டில் சுவையான விருந்துடன் தேசபக்தர் கோ. நடேசய்யர் பற்றியும், நாடகக் கலை பற்றியும் பலவிதமான கருத்துக்களை பரிமாறிக்கொண்டோம்.

மற்றும் கம்பனின் வாரிசு ஜெயராஜ், தம்பி சார்ள்ஸ், பூபால சிங்கம் ஸ்ரீதரசிங், 'திசை' பொன்னம்பலம், கலாநிதி பாக்கியநாதன், அனு. வை. நாகராஜன், நடிகரும் வழக்கறிஞருமான நண்பர் சோ. தேவராஜன் குறமகள் மலையகத்தைச் சேர்ந்த சாமி, சண்முகராஜா இப்படி எத்தனையோ நண்பர்களைச் சந்தித்து உரையாடியது எல்லாமே மனசில் என்றும் பதிவுகளாகவே இருக்கும்.

## தேசபக்தன் நடேசய்யரை நினைவு கூருவோம்!

மலையக மக்களை முதன் முதலில் ஒன்று திரட்டி ஸ்தாபன ரீதியில் அவர்களுக்கு என்று தொழிற்சங்க இயக்கத்தை ஆரம்பித்த கோ. நடேசய்யர் மறைந்து நாற்பத்திரண்டு ஆண்டுகளாகிவிட்டன. ஆனால் இவரை மக்கள் மறந்துவிட்டனர். அவர் அமரரானது நவம்பர் மாதம் 7ம் திகதி (7-11-1947) யாகும். அவர் மறைந்த நவம்பர் மாதத்தை நினைவு கூறவேண்டியது ஒவ்வொரு மலையக மகனின் கடமையாகும்.

இவ்வாறு மலையக கலை இலக்கியப் பேரவை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. அமரர் கோ. நடேசய்யரின பணிகளைப் பற்றி மலையக மக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் அவர் மறைந்த நவம்பர் மாதத்தை நடேசய்யர் மாதமாக நினைவு கூறவேண்டும் என்று பேரவை கேட்டுள்ளது.

மேலும் மலையகத்தின் தொழிற்சங்க முதல்வர் மலையக படைப்பிலக்கியம் பத்திரிகைத்துறை ஆகியவற்றிற்கு முன்னோடியாக திகழ்ந்த கோ. நடேசய்யரை அவர் மறைந்த நவம்பர் மாதத்தில் மலையகமெங்கும் அவரைப் பற்றிய நினைவுக் கூட்டம் கருத்தரங்குகள் நடத்தப்படவேண்டும்.

இன்று மலையகத்தில் தொழிற்சங்கங்கள் சுதந்திரமாக இயங்குகின்றதென்றால் அதற்கு வித்திட்டவர் கோ. நடேசய்யர். அதனால் அவர் மறைந்த நவம்பர் மாதத்தை மலையகத்திலுள்ள தொழிற்சங்கங்கள் தோட்டம் தோட்டமாக அவர் நினைவு கூட்டங்களை நடத்தவேண்டும்.



With Best Compliments from

**KINGS MEDIKALS**

Drugs, Groceries And Fancy Goods

94, Main Street.
HATTON

With Best Compliments from

**SATHYA TRADERS**

Dealers in Pocketing Band Stiff & Color Stiff

S. H. Super Market.
194, 1/C Keyzer Street, Colombo 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக கலை இலக்கியப் பேரவையின்
பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி
கொழுந்து சஞ்சிகை நடத்தும்



# தேசபக்தன்
# கோ. நடேசய்யர்
## நினைவு
# குறு நாவல்
## போட்டி

பரிசு ரூபா **1500/—**

மலையக மக்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்ட முன்னர் பிரசுரிக்கப்படாத குறுநாவலாக இருக்கவேண்டும். பரிசு பெறும் குறுநாவல்களை வெளியிடும் உரிமை மலையக வெளியீட்டகத்தைச் சாரும்.

முடிவு திகதி **25 — 12 — 1989**

எழுத்தாளர் தங்கள் படைப்புகளை பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்

**EDITOR KOZHUNDU**
**57, Mahinda Place, Colombo 6.**

Printed at Print House for Editor - Publisher S, Anthony. Jeeva
57, Mahinda Place Colombo-6,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org